**Embassy of the United States of America**
**Colombo**

# PRESS RELEASE

Public Affairs Section
Tel: +94 (1) 249-8100 Fax: +94 (1) 244-9070
Email: ohararm@state.gov Web: lk.usembassy.gov

Release No. 20170223T

## கலாசார இணைப்பினை வலுப்படுத்துவதற்காக ஐக்கிய அமெரிக்க "மோ மோஜோ" சைடிக்கோ பாண்ட் வாத்திய இசைக்குழுவினர் இலங்கைக்கு விஜயம்

**கொழும்பு, 2017 பெப்ரவரி 23 :** அமெரிக்க "மோ மோஜோ" சைடிக்கோ பாண்ட் வாத்திய இசைக்குழுவினர் ஐந்து நாட்கள் உள்ளடங்கிய சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டிந்ததுடன், கொழும்பில் கடந்த வாரம் பெருந்திரளான சனத்திரள் மத்தியில் உயர் ஆற்றல்மிக்க இலவசப் பொது இசைக்கச்சேரி ஒன்றினையும் நடத்தினர். யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பில் இலங்கையின் இசைக்கலைஞர்களிற்காக இசைவல்லுநர்களினால் வகுப்புக்களை நடத்துதல் மற்றும் இசைக்கலை மாணவர்களிற்கான பயிற்சிப்பட்டறைகளை நடத்துதல் ஆகிய பொதுச் செயல்திறன்களை உள்ளடக்கியதாக அமையும் இந்த விஜயத்திற்கு ஐக்கிய அமெரிக்கத் தூதரகமானது அனுசரணையினை வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் திரு. அத்துல் கேஷப் அவர்கள் கொழும்பில் நடைபெற்ற பொது இசைக்கச்சேரி நிகழ்ச்சியில் இந்த பாண்ட் வாத்திய இசைக் குழுவினரை அறிமுகப்படுத்துவதற்காக ஆற்றிய உரையில் *"இலங்கையுடனான எமது கலாசார இணைப்பினையும் வெவ்வேறு இசைக்கலைப் பாரம்பரியத்தையும் வலுப்படுத்துவதற்காகவும், அமெரிக்கா பற்றிய புரிந்துணர்வினை அதிகரிப்பதற்காகவும் நாம் இங்கு அமெரிக்க இசைவல்லுநர்களை அழைத்து வந்திருக்கின்றோம்."* என்று குறிப்பிட்டார். மேலும் அவர் கூறுகையில், *"அமெரிக்க இசையின் மீது ஆர்வமுள்ள இலங்கை இரசிகர்கள் பலரைப் பார்க்கும்போது எமக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது"* என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பிற்கான தமது விஜயத்தின்போது, "மோ மோஜோ" பாண்ட் வாத்திய இசைக்குழுவினர் இசைத்துறை மாணவர்களிற்காகவும் தேசிய இளைஞர் இசைக்குழுவினருக்கான வகுப்புக்களையும் இடைநிலை வகுப்பு பாடசாலை மாணவர்களிற்கான நேரடிப் பயிற்சிப்பட்டறைகளையும் நடத்தியுள்ளதோடு மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். சுயாதீன தேசிய தொலைக்காட்சியின் (ITN) "வெனச" என்னும் நிகழ்ச்சியில் இந்த பாண்ட் வாத்திய இசைக்குழுவினரின் இசைக்கச்சேரியானது நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. உள்நாட்டு இசைக் கலைஞர்களிற்காகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை மாணவர்களிற்காகவும்

பயிற்சிப்பட்டறைகளை நடாத்துவதற்காக ‘‘மோ மோஜோ’’ பாண்ட் வாத்திய இசைக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் மூன்று நாட்கள் தங்கியிருந்தனர். அத்துடன் யாழ்ப்பாணத்தின் பிரசித்தமான ‘சாரங்கா’ பாண்ட் வாத்திய இசைக்குழுவினருடன் இணைந்து பொது இசைக்கச்சேரி ஒன்றினையும் நடாத்தினர். அமெரிக்க தூதரக Facebook (https://www.facebook.com/Colombo.USembassy/ ) பக்கத்தில் இந்த நிகழ்வு குறித்த தகவல்களை அறிந்து கொள்ள முடியும்.

ஐக்கிய அமெரிக்காவின் தென் பகுதியிலிருந்துதான் சைடிக்கோ இசையானது வருகின்றது. அமெரிக்க நாட்டுப்புறக் கலை, கஜூ, ரெக்க, றொக் மற்றும் றோல், பங்க், ஆபிரிக்க மற்றும் இலத்தீன் ஒலிச் சந்தங்களையும் ஒருங்கிணைக்கின்றது. இதனுடைய இசைக்கலைஞர்கள் ஃபிடில், தாரை, துருத்தி, சாக்ஸபோன் மற்றும் குறைந்த அறியப்பட்ட துடைப்பான், பாரம்பரியமாக ஆடைகளைச் சுத்தம் செய்வதற்காக உபயோகிக்கப்படும் ஒரு கருவி என்பன போன்ற இசை வாத்தியக் கருவிகளையும் வாசிப்பார்கள். அமெரிக்க இராஜாங்க பிறநாட்டு இசைநிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக ‘‘மோ மோஜோ’’ பாண்ட் வாத்திய இசைக்குழுவினர் உலகம் முழுவதும் உள்ள நாடுகளிற்கு விஜயம் செய்திருக்கின்றார்கள். இசைக்குழுவின் Facebook பக்கம் : https://www.facebook.com/MoMojoMusic/

# # #